# 7

# அல் கஸ்ரு – வல் ஜம்உ

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் தொழுகை மிக முக்கியமானதாகும். தொழுகையை விடுவதற்கு இஸ்லாத்தில் அனுமதியில்லை. பிரயாணம், நோய், யுத்தம், அச்சமான சூழ்நிலை போன்ற நெருக்கடியான நேரங்களிலும்கூட தொழுகையை நிறைவேற்றியே ஆகவேண்டும். இதனாலேயே பிரயாண சூழ்நிலைகளில் தொழுகையை நிறைவேற்றுவதற்கு இலகுபடுத்தப்பட்ட வழிமுறைகளை இஸ்லாம் அறிமுகம் செய்துள்ளது. அவற்றுள் ஒன்றே **ஜம்உ** மற்றும் **கஸ்ர்** ஆகும். இது சேர்த்து மற்றும் சுருக்கித் தொழுவதாகும்.

## சேர்த்துத் தொழுதல் (ஜம்உ)

பிரயாணத்திலிருக்கும் ஒருவர் பகல் நேரத் தொழுகைகளான ழுஹர், அஸர் இரண்டையும், அதேபோல் இரவு நேரத் தொழுகைகளான மஃரிப், இஷா ஆகிய இரண்டையும் சேர்த்துத் தொழுவது ''ஜம்உ'' என அழைக்கப்படுகின்றது. இந்த ''ஜம்உ'' தொழுகையை பின்வரும் ஏதாவது ஒருவகையில் நிறைவேற்றலாம்.



**முற்படுத்தி சேர்த்துத் தொழுதல் (ஜம்உத் தக்தீம்)**

பிரயாணம் செய்பவர் ழுஹருடைய நேரத்தில் ழுஹர் தொழுது விட்டு அதைத் தொடர்ந்து அஸரையும், மஃரிபுடைய நேரத்தில், மஃரிபைத் தொழுது விட்டு அதைத் தொடர்ந்து இஷாவையும் சேர்த்துத் தொழலாம். இவ்வாறு தொழுவதை ''ஜம்உத் தக்தீம் - முற்படுத்தி சேர்த்துத் தொழுதல்'' என அழைப்பர்.

**பிற்படுத்தி சேர்த்துத் தொழுதல் (ஜம்உத் தஃகீர்)**

பிரயாணம் செய்பவர் ளுஹரைப் பிற்படுத்தி, அஸருடைய நேரத்தில் முதலில் ழுஹர் தொழுது விட்டு அதைத் தொடர்ந்து அஸரையும் அவ்வாறே மஃரிபைப் பிற்படுத்தி, இஷாவுடைய நேரத்தில் முதலில் மஃரிபைத் தொழுது விட்டு அதைத் தொடர்ந்து இஷாவையும் சேர்த்துத் தொழுது கொள்ளலாம். இவ்வாறு தொழுவதை ''ஜம்உத் தஃகீர்'' என அழைப்பர்.

## சுருக்கித் தொழுதல் (கஸ்ர்)

நான்கு ரக்அத் தொழுகைகளை இரண்டு ரக்அத்துகளாகச் சுருக்கித் தொழுவதை ''கஸ்ர்'' என்பர். இவ்வாறு சுருக்கித் தொழுவது பிரயாணிகளுக்கு மட்டும் உரிய சலுகையாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது பிரயாணங்களில் இவ்வாறு சுருக்கித் தொழுதுள்ளார்கள்.

**''நீங்கள் பூமியில் பிரயாணம் செய்யும்போது (நீங்கள்) தொழுகையைச் சுருக்கிக் கொள்வது உங்கள் மீது குற்றம் ஆகாது.''** (4: 101)

### அல் ஜம்உ வல் கஸ்ர்

நான்கு ரக்அத்கள் கொண்ட தொழுகைகளை இரண்டிரண்டாக சுருக்கி ஜம்உத் தக்தீமாகவோ ஜம்உத் தஃகீராகவோ நிறைவேற்றலாம். ஆனால் மஃரிப் தொழுகையைப் பொறுத்தவரை அதன் ரகஅத் எண்ணிக்கை எத்தகைய மாற்றத்துக்கும் உட்பட மாட்டாது.

### ஜம்உ - கஸ்ர் செய்பவர்கள் கவனத்திற் கொள்ள வேண்டியவை:

1. நான்கு ரக்அத் தொழுகைகளான ழுஹர், அஸர் மற்றும் இஷா தொழுகைகளை மட்டுமே சுருக்கி இரண்டு ரக்அத்களாகத் தொழலாம். பஜ்ரு தொழுகையைச் சேர்த்தோ, சுருக்கியோ தொழ முடியாது. மஃரிப் தொழுகையைப் பொறுத்த வரை அதனைச் சுருக்கித் தொழ முடியாது. ஆனால் சேர்த்துத் தொழ முடியும்.
2. நான்கு ரக்அத் தொழுகைகளை இரண்டு ரக்அத்களாக ''கஸ்ர்'' செய்யும் போது ஒவ்வொரு ரக்அத்திலும் வழமை போல் ஸூரத்துல் பாத்திஹாவையும் திருக்குர்ஆனின் சில வசனங்களையும் ஓதி முறைப்படி தொழ வேண்டும்.
3. கஸ்ர் செய்யக்கூடிய சலுகை ஊரின் எல்லையைத் தாண்டியதிலிருந்து ஆரம்பமாகிறது. அதனைத் தொடர்ந்து ஜம்உத் தஃகீர் செய்பவர், குறிப்பிட்ட

தொழுகையின் நேரம் கழிவதற்கு முன் அடுத்த நேரத் தொழுகையுடன் சேர்த்துத் தொழுவதாக நிய்யத்து வைக்க வேண்டும்.

4. பிரயாணத்தில் இருப்பவர் வித்ரு மற்றும் பஜ்ருடைய ஸுன்னத்தான தொழுகைகளை விடாமல் தொழுவது விரும்பத்தக்கது.

5. பிரயாணத்திலிருப்பவர்கள் ஜம்உ செய்யும்போது இரண்டு தொழுகைகளுக்கும் ஓர் அதானும் ஒவ்வொரு தொழுகைக்கும் தனித் தனியே இகாமத்தும் சொல்லலாம்.

6. சுருக்கித் தொழுபவர்கள் பூரணமாகத் தொழும் ஓர் இமாமைப் பின்பற்றித் தொழ முடியாது.

**பயிற்சி**

அ. சரி பிழை கூறுக:

1. பிரயாணத்தில் இருக்கும் ஒருவருக்குத் தொழுவது கஷ்டமாயின் கழாச் செய்து கொள்ளலாம். ( )

2. பஜ்ருத் தொழுகையை சேர்த்தோ அல்லது சுருக்கியோ தொழ முடியாது. ( )

3. ஜம்உத் தக்தீம் என்பது முற்படுத்தி சேர்த்துத் தொழுவதைக் குறிக்கும். ( )

4. பிரயாணிகள் எந்த ஒரு ஸுன்னத்தான தொழுகையையும் நிறைவேற்ற வேண்டியதில்லை. ( )

ஆ. உமது வாழ்வில் கஸ்ர், ஜம்உ செய்து தொழுத ஓர் அனுபவத்தினைச் சுருக்கமாக எழுதுக.